Arimāā Nōkku

# அரிமா நோக்கு

11 : 1 ஏப்பிரல் 2017

₹ 30

ISSN 2320-4842



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Literature, Art, Culture, History, Philosophy and Science

ISSN 2320-4842

அரிமா நோக்கு
11: 1 ஏப்பிரல் 2017

திருமண விருந்து
- வ. ஜெயதேவன் 03
Conflation of Earth Mother and Mother Goddess Archytypes in Tamil
- S. Vanathu Antoni 06
பரணர் பாடல்களில் குறுநில மன்னர்கள்
- க. மங்கையர்க்கரசி 11
Tamil and Ariyam
- R. K. R. Rajarajan 19
மார்கதர்சி சேஷய்யங்கார்
- ஸ்ரீ வித்யா. ரா. சு. அய்யர் 24
பேராசிரியர் சோ.ந.கந்தசாமியின் குறுந்தொகை ஆராய்ச்சித் தெளிவுரை: அமைப்பும் அழகும்
- இரா. மோகன் 27
Thirt-two Stylistic Devices: Tolkappiyam and Arthasastra
- P. Maruthanayagam 30
கீழ்க்கணக்கு நூல்களில் பாலினப் பாகுபாடுகளும் வாழ்வியல் நெறிமுறைகளும்
- எஸ். சுஜாதா 34
தொல்காப்பியத் திணைகள், துறைகள் தூவும் தனிச்சிறப்பும் திகைப்பும்
-நுணாவிலூர் கா. விசயரத்தினம்37
காற்று, காற்றுக்குறி, திசைகள்
- தி. கல்பனா தேவி 43
மாதவியின் சமூகப் புரட்சி
- க. நர்மதா 47
மனித உரிமைக் கோட்பாடுகள் உருவாக்கம்
- லூ. யேசுமரியான் 53
ஈழத்தமிழும் இந்தியத் தமிழும்
- இரா. கோதண்டராமன் 53

# தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

## ஐக்கிய இந்திய நாடுகள்?

கல்வி பெறுவது ஒவ்வொரு குடிமகனுடைய உரிமை என்பது போலத் தான் கல்வியைத் தாய்மொழியில் பெறுவதும் தாய்மொழிவழியாகப் பெறுவதும்.

பன்மைத்தன்மையை இன வழியாய், மொழி வழியாய், மத வழியாய், கலை, பண்பாட்டு வழியாய், வாழ்க்கைமரபுகள் வழியாய்ப் பெற் றுள்ள மக்கட் சமூகம் ஒருங்கிணைந்த ஒரு நாட்டில், ஒரு நாடு, ஒரு மொழி, ஒரு பண்பாடு என்னும் ஒற்றைத் தன்மையை உரு வாக்க இயலாது. நிலப்பரப்புவழி ஒற்றை நாடு, ஒற்றை அரசு முறை என்பனவற்றை நிலைநிறுத்த முயல்வது எளிதானது இல்லை. பொதுக்கோட்பாடு மூலம் ஒன்றிணைந்திருந்த சோவியத் ஒன்றியம் தகர்ந்துபோனது ஒரு வரலாற்று எச்சரிக்கையாக இந்தியாவைப் போன்ற நாடுகளுக்கு இருக்கிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில்கூட ஒவ்வொரு மாநிலத்திற்கும் உரிய தனிச் சிறப்புகள் பேணப்படுகின் றன. தனித்தனிக் கொடிகளை அங்கு மாநிலங்கள் பெற்றிருக்கின் றன. ஆங்கிலமே அமெரிக்கர்களின் பொதுமொழி என்பதுகூட, வினாக்களை எதிர்கொள்ளும் நிலைமையில் உள்ளது. அது ஒரு வந்தேறிகளின் நாடு. ஒற்றைத் தன்மையைத் தக்கவைத்துக்கொள்ள இயலாது.

தொல்குடி மக்களாகிய இந்தியர்கள் தம் இன மீட்சியைப் பற்றி எண்ணுகின்றனர், பேசுகின்றனர், முயல்கின்றனர். கருப்பின அமெரிக் கர்கள் இன்னும் முற்றிலுமான விடுதலைப் பயன்களை அடைய வில்லை. அங்கு ஸ்பெயின் மொழி பேசும் மக்கள் பெரும் எண்ணிக்கையில் உள்ளனர். இப்போது அமெரிக்க அதிபராக இருக்கும் ட்ரம்ப் மெக்சிக்கோவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே பெருமதில் எழுப்பத் திட்டமிட்டுச் செயற்பாட்டிலும் இறங்கியுள்ளார், ஸ்பெயின் மொழி பேசும் மெக்சிக்கோ மக்களை உள்ளே வர விடாமல் தடுப்பதற்காக.

சிற்சில ஆண்டுகளுக்கு முன் உலகின் கவனத்தைத் தன்பால் ஈர்க்கும் வரலாற்று நிகழ்வு ஒன்று அமெரிக்கத் தலைநகர் வாசிங்டனில் நடைபெற்றது. இஸ்பேனிக்குகள் என்று சொல்லப்படும் ஸ்பெயின் மொழி பேசும் மக்கள் அமெரிக்காதான் எங்களுக்கும் தாய்நாடு. ஆகவே எங்கள் தாய்நாட்டை எங்கள் தாய்மொழியில் வணங்குவோம் என்று முழக்கமிட்டு அமெரிக்க நாட்டுப்பண்ணைடத் தம் தாய்மொழியில் மொழிபெயர்த்துப் பாடினார்கள். அமெரிக்க இஸ்பேனியர்கள் செய்ததுபோல இங்கும் இந்திய தேசிய கீதத்தை ஒவ்வொரு மாநிலமும் தனக்குரிய தாய்மொழியில் மொழிபெயர்த்துப்

ISSN 2320-4842

*ஆசிரியர்*
ஈரோடு தமிழன்பன்
*இணையாசிரியர்*
*(மதிப்புறு நிலை)*
வ. ஜெயதேவன்
*ஆசிரியர் குழு*
சிலம்பொலி சு. செல்லப்பன்
கா. செல்லப்பன்
நா. கணேசன் (அமெரிக்கா)
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
ஒப்பிலா மதிவாணன்
சீதா லட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
இரா. பிரேமா
பா. இரவிக்குமார்
மருதூர் அரங்கராசன்
பெ. இலக்குமிநாராயணன்
எஸ். ஏ. சங்கர நாராயணன்
*அறிவுரைக் குழு*
இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்
*பதிப்பாளர்*
இரா. பன்னிருகைவடிவேலன்

பாட விரும்பினால் அதை வரவேற்கும் உள்ளம் இந்திய அரசுக்கு இருக்குமா?

இப்போதைய நடுவண் அரசு அறிவிக்கும் தனது திட்டங்களுக்கெல் லாம் இந்தியிலோ சமற்கிருதத்திலோதான் பெயர் சூட்டுகிறது. இந்திய அரசின் ஒப்புக்கொள்ளப்பட்ட பட்டியலில் உள்ள பல்வேறு மொழி களின் பெயர்களைச் சூட்டக்கூடாதா? சாகித்திய அகாதெமி கவனத்தில் எடுத்துக்கொண்டுள்ள 24 மொழிகளைக் கொண்டு பெயர் சூட்டக்கூடாதா? இந்தியும் சமற்கிருதமும் தவிர வேறு மொழிகளே இந்தியாவில் இல்லையா? சுழற்சிமுறையில் பல்வேறு இந்திய மொழிகளுக்கும் உரிமையும் உயர்வும் தரும் மனப்பான்மை ஏன் இந்திய அரசுக்கு இல்லாமற் போயிற்று?

அரசியல் அடிப்படையில் அமெரிக்க ஐக்கிய நாடுகள்போல இந்திய ஐக்கிய நாடுகள் உருவானால்தான் ஒருவேளை இந்நிலைமை உருவாகுமா?

## கட்டண விவரம்

| | | |
|---|---|---|
| வாழ்நாள் கட்டணம் | ரூ. 3000/- | US $ 150 |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000/- | US $ 200 |
| பெரும்புரவலர் கட்டணம் | ரூ. 10,000/- | US $ 500 |
| நிறுவனம்சார் உறுப்பினர் (Institutional Membership) | ரூ. 15,000/- | US $ 700 |

### விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| பின்னட்டை (பல வண்ணங்கள்) | ரூ. 15,000 |
| உள்ளட்டை (பல வண்ணங்கள்) | ரூ. 10,000 |
| முழுப்பக்கம் (கருப்பு & வெள்ளை) | ரூ. 3,000 |
| அரைப்பக்கம் (கருப்பு & வெள்ளை) | ரூ. 1,500 |